**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.55/2024**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 16 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பெரியசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : அங்கம்ம நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 80 | கிராமம் | : கோரமங்கலம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**16.02.2026**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

2. 15.05.2000ம் தேதியிட்டு மகபூப் வகையறா எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.627ல் என் பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 24.03.2001ம் தேதியிட்டு பட்டா எண்.627க்கு செலுத்திய வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 25.11.2024ம் தேதியிட்டு புல எல்லை அளக்கக்கோரும் மனுவிற்கு கொடுக்கப்பட்ட ஒப்புகைச்சீட்டு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(ஒப்புகைச்சீட்டு பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 25.11.2024ம் தேதியிட்டு திருத்தணி காவல் ஆய்வாளருக்கு நான் கொடுத்த மனு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(மனு பி.வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 29.11.2024ம் தேதியிட்டு திருத்தணி வட்டாட்சியருக்கு நான் கொடுத்த மனு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(மனு பி.வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 10.12.2024ம் தேதியிட்டு

திருத்தணி வட்டாட்சியர் காவல் ஆய்வாளருக்கு அனுப்பிய கடிதம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(கடிதம் பி.வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** திருத்தணி சார்பு நீதிமன்ற அ.வ.எண்.23/2025ன் பிராது சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(பிராது பி.வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)